2010 ஏப்ரல் 21]

2. விதி 110–இன்கீழ் அறிக்கை

முல்லைப் பெரியாறு வழக்கில் உச்ச நீதிமன்றம் அமைத்த குழுவில் தமிழக அரசின் சார்பாக உறுப்பினரை நியமித்தல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணை பற்றிய வழக்கில் 18-2-2010 அன்று உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு; அதிகாரம் அளிக்கப்பட்ட குழு ஒன்றினை அமைத்து ஆணையிட்டுள்ளது. இதையொட்டி 5-3-2010 அன்று மத்திய அரசு, தமிழக அரசின் சார்பில் ஒரு உறுப்பினரை நியமனம் செய்ய தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியது.

இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்களும் ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தால் முடிவெடுக்கப்பட்டுள்ள நிலையில், புதிதாக இன்னொரு குழு அமைக்கத் தேவையில்லை என்று கருதி, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைத் திரும்பப் பெற, தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் 8-3-2010 அன்று தாக்கல் செய்த மனுவினை (Recall Petition) உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாத நிலையில், மீண்டும் 5-4-2010 அன்று மத்திய அரசு மீண்டும் தமிழக அரசை மேற்படி குழுவுக்கு ஒரு உறுப்பினரை உடனடியாகத் தமிழக அரசின் சார்பாகப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது.

இந்தப் பிரச்சினை குறித்து, தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் தெரிவித்த கருத்தினைக் கேட்டும், தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முல்லைப் பெரியாறு குறித்த வழக்கின் முடிவுதான் தமிழகத்துக்கு முக்கியம் என்ற நோக்கத்தோடும், உச்ச நீதிமன்றம் அறிவித்த குழுவில் தமிழக அரசின் சார்பில் பங்கேற்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவில் தமிழக அரசின் சார்பாக ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் திரு. ஏ.ஆர். லெட்சுமணன் அவர்கள் இடம் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.